Registered as a Newspaper

பக்கங்கள் 6

விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 30 | 16-11-94 | புதன்கிழமை | ஓசை 271

## மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்க தென்மராட்சியில் துரித ஏற்பாடு

தென்மராட்சிப் பகுதியில் மாவீரர் வாரத்தை எழுச்சியுடன் அனுஷ்டிக்க துரித ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மாவீரர்களை நினைவு கூரும் வீதிவளைவுகளும், மாவீரர் திருவுருவப் படங்களை வைப்பதற்கான குடில்களும் பரவலாக அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கான, பணிகளில் பொது ஸ்தாபனங்கள், அரசாங்க

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஜெனரல் ஹமில்டன், பிராங் டி சில்வா விரைவில் பதவிகளை இழக்கலாம்

### இராணுவ கட்டமைப்பும் மாற்றப்படலாம்

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதுகாப்புத்துறை கட்டமைப்பில் மாற்றங்களை செய்ய ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா திட்டமிட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா ஆகியோர் விரைவில் பதவியிலிருந்து மாற்றப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரு மாதங்களின்போது சிறிலங்கா பொலிஸ் தமது உத்தரவுகளுக்கு அமைய நடக்கவில்லை என சந்திரிகா தமக்கு நெருங்கியவர்களிடம் கூறியதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை காமினி திசாநாயக்காவின் மறைவின் பின்னர் இரகசிய பொலிசார் திருமதி சிறிமா திசாநாயக்காவின் வீட்டில் சோதனை நடத்தியமை குறித்தும் சந்திரிகா பொலிசார் மீது அதிருப்தி கொண்டுள்ளார். சிறிமா

[6ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ முன்தயாரிப்புக்களை அரசாங்கம் கைவிடக் கூடாது

### சண்டே ரைம்ஸ் ஆலோசனை

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசியல் வழிமுறைகளை ஆராயும் அதேசமயம், இராணுவ முன் தயாரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அவசியமானதாகும். இவ்வாறு சண்டே ரைம்ஸ் பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: அரசியல் தீர்வு காண முயற்சிக்கப்படும் இவ்வேளையில் மற்றைய வழிமுறைகளையும் கடைப்பிடித்தல் அவசியம். நல்லதில் நம்பிக்கை கொள்ளும் அதேசமயம் மோசமான நிலையை எதிர்கொள்ளவும் நாம் தயாராகிக் கொள்ளவேண்டும். இதன்படி இராணுவ முன் தயாரிப்பு நடவடிக்கை முக்கியமானது இதற்காகவே முழுநேர பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படுவதை நாம் பரிந்துரைக்கின்றோம் என சண்டே ரைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை அரசியலில் 'றோ' தீவிர அக்கறை; புலிகள்-அரசு பேச்சுக்கள்: நுணுகி ஆராய்வு

## 95-ம் ஆண்டு முற்பகுதி; பாராளுமன்ற தேர்தல்?

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மைப் பலம் ஒன்றைப் பெறுவதற்காக அடுத்த ஆண்டின் முற்பகுதியில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சிந்தித்து வருவதாக ஹிரு பத்திரிகை தெரிவித்துள்ளது

அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை நீக்கும் போது பாராளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மைப் பலத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி பெற்றிருக்க வேண்டியது மிக அவசியமாகும் என்ற கருத்து வலுவடைந்து வருவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

## சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனை கிழக்கு பிரதேச செயலகத்திற்கு முன்னாலுள்ள பாலம் அருகில் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் பலியானார்.

## ரணசிங்காவிற்கு தூதுவர் பதவி

[கொழும்பு]

முன்னாள் தகவல் துறை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்காவிற்கு வெளிநாட்டு தூதுவர் பதவி வழங்கப்பட இருப்பதாக அரசாங்கத்துடன் தொடர்புடைய உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தீவிர பிரேமதாசா ஆதரவாளராகிய இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக கட்சியிலிருந்து விலகி ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டார்.

இவர் முன்னரும் வெளிநாட்டு தூதுவராக பணி புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்றம் கலைக்கும் திட்டம் அரசிற்கில்லை

- பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய பாராளுமன்றத் தேர்தலொன்றையும் அரசாங்கம் நடத்தமாட்டாது என நீதி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலை போதுமானதென்றும், பாராளுமன்றத்தைக்கலைத்து புதிய பலம் பெற வேண்டிய தேவை இல்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய அரசியலமைப்புப்படி, புதிய ஜனாதிபதி பதவியேற்று ஓராண்டுக்குள் பாராளுமன்றத்தைக்

[6ஆம் பக்கம் பார்க்க]

## காமினி கொலை விசாரணையில் கரிசனை

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் குறித்தும் சிறிலங்காவின் தற்போதைய நிலைமைகள் மற்றும் காமினி திசாநாயக்காவின் கொலை குறித்தும் இந்திய புலனாய்வு அமைப்பான 'றோ' மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக 'சண்டே லீடர்' பத்திரிகை குறிப்பிடுகின்றது.

காமினி திசாநாயக்காவின் கொலையை தொடர்ந்து இவ் விடயத்தில் றோ அதிக அக்கறை காட்டி வருகிறது. கிராண்பாஸ் குண்டுவெடிப்பு தொடர்பான தகவல்களை ஆராய்வதிலும் சம்பவ இடத்தில் பெறப்பட்ட தடயப் பொருட்களை பரிசீலிப்பதிலும் இக்கட்டம் தொடர்பான 10 நிமிட நேர வீடியோ ஒளிப்பதிவை அவதானிப்பதிலும் றோ பல நாட்களை செலவழித்துள்ளதாகவும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காமினி படுகொலை செய்யப்படுவதற்கு முன்பாக அவர் திருப்பதி மற்றும் சென்னைக்கு விஜயம் செய்வது குறித்த முழுமையான ஓர் அறிக்கை ஒன்றை றோ முன்னதாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு அனுப்பியிருந்தது. இந்த அறிக்கையில காமினியின் பாதுகாப்பு பலமானதாக இல்லை என றோ பிரதமர் ராவுக்கு எடுத்துக் கூறியிருந்தது. அண்மையில் இது போன்ற கம்பியூட்டர் மூல அறிக்கை ஒன்றில் விடுதலைப் புலிகள் சந்திரிகா பிரதமரானதும் நடந்துகொள்ளும் விதம் குறித்த விரிவான தகவல் ஒன்றை றோ பிரதமர் ராவுக்கு அனுப்பியிருந்தது:

காமினி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட சில நிமிடங்களில் அத்தகவல் றோவின் செயலர் அவ்தார்சிங் சியாலிக்கு

[6ஆம் பக்கம் பார்க்க]

### அரசியல் உயர் தலைவர்களுக்கான பாதுகாப்பு

## அமெரிக்க பாதுகாப்பு திணைக்கள ஆலோசனையை ஐ. தே. க பெற்றது

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் உயர் தலைவர்களுக்கான பாதுகாப்பு தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு இராஜாங்க திணைக்களத்தின் ஆலோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கோரியிருந்ததாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது

ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் அரசாங்க உயர் தலைவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கணிப்பீடு செய்வதற்கென அமெரிக்க பாதுகாப்பு உயரதிகாரிகள் கொழும்புக்கு வருகை தந்திருந்ததாகவும் பிரதம மந்திரியின் பாதுகாப்பு பிரிவு, இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பிரிவுகள், அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவுகள், பொலிஸ் அதிரடிப்படைப் பிரிவு பாராளுமன்ற பொலிஸ் பிரிவு ஆகியவற்றின்செயற்பா

[6ஆம் பக்கம் பார்க்க]

## அடுத்த கட்டப் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா ஆராய்வு

### 'லங்காதிப' தகவல்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அடுத்த கட்டப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஈடுபட்டு வருவதாக "லங்காதிப" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக, முதற்கட்டப் பேச்சுக்களில் அரசாங்க தரப்பு பிரதிநிதிகளாக கலந்து கொண்ட மூவருடனும் இவ் வாரம் கலந்துரையாடல்களை நடத்த சந்திரிகா குமாரதுங்கா திட்டமிட்டுள்ளார் என அரச தரப்பு பிரதிநிதியாக கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்துள்ளார்

முதற் கட்டப் பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்கு முக்கியமானது என்றும் அவர் கூறினார்

இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்காக அரசாங்க பிரதிநிதிகள் குழு யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்னர் யாழ்ப்பாணம் தொடர்பான நிலை ஆராயப்பட இருப்பதாகவும் அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பிரதி அமைச்சர்கள் இன்று பதவி ஏற்பர்

(கொழும்பு)

புதிய அமைச்சரவையின் பிரதி அமைச்சர்கள் இன்று காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவியேற்றுக் கொள்வார்கள் என அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதி அமைச்சர்களின் பொறுப்புக்களிலும் பெரியளவிலான மாற்றங்கள் இடம்பெறாது எனவும் அப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

## 'பபதா'வே கரும்புலிகள் தாக்குதலில் சிக்கியது

[கொழும்பு]

அண்மையில் வெற்றிலைக்கேணி கரையில் கடற்புலிகளால் தாக்கப்பட்டு பாரிய சேதத்திற்குள்ளான கடற்படையின் தரையிறக்கும் கப்பல்-லான்டிங் கிராப்ட்-பபதா என்ற பெயர் கொண்டது என சண்டே ஒப்சேவர் தெரிவித்துள்ளது-

கடற்படையிடம் சொற்பளவில் உள்ள இத்தகைய தரை இறக்கும் கப்பல்களில் பபதாவும் ஒன்று. பபதாவின் இழப்பு வடக்கு போர் முனையில் படையினருக்கான விநியோகத்தில் பெரும் பாதிப்பைத் தரும் என்றும் சண்டே ஒப்சேவர் சுட்டிக் காட்டியுள்ளது

கடந்த 8ஆந் திகதி அதிகாலை வெற்றிலைக்கேணிக் கரையில் நின்ற கடற்படையின் தரையிறக்கு கப்பல் கடற்கரும்புலி வீரர்களினால் தாக்கப்பட்டு பாரிய சேதத்திற்குள்ளானமை தெரிந்ததே.

## படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்றுவழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மங்கள சமரவீரா மீது தர்மசிறி குற்றச்சாட்டு

### பிரதமர் பதவியைக் கெடுத்தாராம்

(கொழும்பு)

பிரதமராக நான் தெரிவாகியிருக்கவேண்டிய சந்தர்ப்பத்தை தகவல் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர தனது காழ்ப்புணர்ப்பு முயற்சிகளால் தடுத்து விட்டதாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்ததாக கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று குறிப்பிட்டுள்ளது

திருமதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவாகிக்கொண்டிருந்த சமயத்தில் திருமதி சிறிமா பண்டார

[6ஆம் பக்கம் பார்க்க]

## காமினி இறுதிச்சடங்கிற்கு சோனியா வரவிருந்தார்

(கொழும்பு)

பாலத்துறைக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காவின் இறுதிச் சடங்குகளில் பங்கு கொள்ள முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியின் மனைவியான சோனியா காந்தி வருகைதர இருந்ததாக கொழும்பு வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது,

எனினும், அவரது பாதுகாப்பு ஆலோசகர்களின் அறி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வெளியேறத் தடை

(கொழும்பு)

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய டாக்டர் விக்கிரமவீரசூரிய, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல ஆகியோர் மீதான விசாரணை முடியும் வரை நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### விசேட கழிவு

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன் கூட்டியே ஒழுங்கு செய்து விசேட கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள் தொடர்பு: சகலகலா தொழிலக விவசாயிகளிலும் (சி - 10676)

### நுளம்புத் தொல்லையா?

நீம் சுகாதார தூபம் புகைத்து நுளம்பை விரட்டுங்கள். நிம்மதியாக நித்திரைகொள்ள. நீம்தூபம். ஒரு பக்கற் விலை - ரூ 2/50 25 பக்கற் கொண்டது ரூ. 50/- எங்கும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்'' (சி10708)

### சிறிமுருகன் வெற்றி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்ட பாடசாலைகளிடையே கடந்த வாரம் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் ஏழாலை சிறிமுருகன் அணி வெற்றி பெற்றுள்ளது.

17 மற்றும் 15 வயதுக்குட்பட்ட இரு பிரிவுகளிலும் மேற்படி அணி சுன்னாகம் ஸ்கந்தாவை எதிர்த்து விளையாடியே வெற்றி பெற்றது.

### உரிமை கோரா நிலையில் வள்ளம்

(நல்லூர்)

குருநகர் கடற்றொழிக அபிவிருத்திச் சங்கத்தின் முன்னுள்ள வளவில் உரிமைகோரப்படாத நிலையில் மீனவரின் வள்ளம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ. தவரட்ணம் இவ்வள்ளம் குருநகர் மீனவர்களினால் பெரியவேலி எனுமிடத்தில் உள்ள கடலில் இருந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்து மீட்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார் கடற்படையின் தாக்குதல் காரணமாக மீனவர்கள் இவ்வள்ளத்தை கைவிட்டிருக்கலாம் என்றும் உரியவர்கள் குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கத்துடன்தொடர்பு கொள்ளுமாறும் இவர் தெரிவித்துள்ளார். (17)

### தெளிவின்மை

தமிழீழ மீட்புநிதிமீளளிப்பு தொடர்பாக வெளியான தொடர் இலக்கங்களில்திருத்தம் எனும் தலைப்பில் நேற்று வெளியான சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆனிமாதத்திற்குரிய இலக்கம் தெளிவில்லாமையால் யா/ச- 3309 என பிரசுரமாகிவிட்டது. அதனை யா/சா/ 3309 என திருத்திக்கொள்ளவும்.

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 15-6-1969

வீரச்சாவு 3-10-1994

### லெப்டினன்ட் பாபு
(பத்மநாதன் பாஸ்கரன்)

(மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவடைந்தார்)

மண்ணின் மீட்பே
உன் இதய தாகமாக இருந்தது.
உன் தியாகம்
தேசத்தின் வரலாறு!

சுதுமலை வடக்கு, மானிப்பாய். - குடும்பத்தினர் (10111)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கணபதி கிருஷ்ணபிள்ளை

திதி-16-11-1994

தோற்றம் 06-10-1927 மறைவு 22-10-1993

அன்பின் உருவமாய், பாசத்தின் இருப்பிடமாய் விளங்கிய தெய்வமே.
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுடன் என்றென்றும் வாழும்,

மனையம் தோட்டம், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

மனைவி,பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் (10107)

---

## யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## முழுநிலா நாட் கருத்தரங்கு

| | |
|---|---|
| காலம் | : 17-11-1994 ம் திகதி பிற்பகல் 3.00 மணி |
| இடம் | : குமாரசுவாமி மண்டபம் |
| கருத்துரை 1 | : மதுவின் தொழிற்பாடும் விளைவுகளும் |
| வழங்குபவர் | : கலாநிதி க. சிவபாலன் தலைவர், உடற்றொழிலியற்றுறை மருத்துவபீடம்,யாழ்.பல்கலைக்கழகம் |
| கருத்துரை 11 | : உளமெய்ப்பாடு நோய்கள் (உளம்சார் உடல் நோய்கள்) (phycho Somatic disorders) |
| வழங்குபவர் | : கலாநிதி டி. ஜே. சோமசுந்தரம் தலைவர், உளமருத்துவத்துறை மருத்துவ பீடம் மனோ வைத்திய நிபுணர், யாழ்ப்பாணம் / தெல்லிப்பழை வைத்தியசாலை |

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர், யா. இ. க. ப. மா. ச.

(சி/10720)

---

## 35-ம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்



அமரர்

### செல்லையா கதிரவேற்பிள்ளை

மண்ணில் 05-05-1937 விண்ணில் 13-10-1994

மாறாத நோய் தீர்க்க மருத்துவம் செய் மனை போனோம்
ஆறாத நீர் கண்ணால் ஒழுகிடவே கொண்டு வந்தோம்
குடும்ப ஒளிவிளக்கே கண்மூடிப் போனீர்கள்
படுந்துயரம் ஆறவழி புரியாது திகைக்கின்றோம்
ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்

வத்தனை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

தாய், மனைவி, மக்கள், மருமகள், பேரன், சகோதரர்,மைத்துனர் (10095)

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ் கோட்டம்

## அறிவித்தல்

11 - 11 - 94 அன்று நடைபெறவிருந்த பொதுச் சபைக் கூட்டம், 16 - 11 - 94 இன்று புதன்கிழமை புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் நடைபெறும்.

செயலாளர் யாழ் கோட்டம்

(சி 10721)

---

## நினைவு கூருகின்றோம்...

### 16. 11. 1994

1986-ம்ஆண்டு இதேதினத்தில் அம்பாறை-திருக்கோயில் பகுதியில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தபோது சிறிலங்கா அதிரடிப்படையினரால் கைதாகி முகாமில் வைத்து அடித்துக்கொல்லப்பட்டு எமைப் பிரிந்த,

**தவம்** (ஜெயரத்தினம் தவராஜா - திருக்கோயில் - அம்பாறை)

**குரு** (சின்னத்தம்பி பத்மநாதன் - கரடித்தோட்டம், காரைதீவு 03 - அம்பாறை)

1987-ம் ஆண்டு உரும்பராய் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**அன்சார்** (செல்லையா கணேசலிங்கம்- செல்வபுரம், உரும்பராய் தெற்கு - யாழ்)

அக்கரைப்பற்று - கோணாவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கேபு** (சண்முகம் இளங்கோ - வீரமுனை - சம்மாந்துறை)

கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**சண்முகம் இரங்கநாதன் மாஸ்ரர்** (கோப்பாய்)

1988 ம் ஆண்டு சாவகச்சேரி - சங்கத்தானைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**நாகூர்ச்செல்வம் குணாளன்**

1990 ம் ஆண்டு வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**ஈழம்** (மகாலிங்கம் சுகந்தன் -ஏழாலை மத்தி - யாழ்)

1991 - ம் ஆண்டு அம்பாறை - கோணாவில் பகுதியில் வீரச்சாவெய்திய,

**சந்திரன்** (-கேசவேஸ்வரன் - கோணாவில் - அம்பாறை)

1992 -ம் ஆண்டு இளவாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். தம்பி சிவானு** (ஐயாத்துரை தருமலிங்கம் - இளாலி - எழுதுமட்டுவாள்)

மணலாறு -சிலோன்தியேட்டர் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**அண்ணாத்துரை** (சரவணமுத்து காந்தரூபன்6-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

**லெப். கரிகாலன்** (ஆறுமுகம் சாந்தகுமார்- சேமமடு - வவுனியா)

1993 -ம் ஆண்டு பூநகரி - நாகதேவன்துறை இராணுவக் கடற்படைக்கூட்டுத்தளம் மீது ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**லெப். புவனேஸ்வரன் - புவனேஸ்** (இருதயநாதர் வசந்தகுமார் - புதுக்குடியிருப்பு - முல்லை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10717)

---

## இன்று வெளிவருகின்றது...

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும் திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவான

# பிஞ்சுமனம்

(முழுநீளவண்ணப்படம்)

படப்பிடிப்பு: எழிலன்

படத்தொகுப்பு: சேகர்

பாடல்கள்: புதுவை இரத்தினதுரை

இசை, ராஜன்ஸ் இசைக்குழு

கதை, திரைக்கதை, வசனம், இயக்குதல் ந. கேசவராஜன்

இது ஒரு திரைப்படப் பிரிவின் வெளியீடு

---

## மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

# எல்லைக்கற்கள்

(முழுநீளவண்ணச்சித்திரம்)

திரைக்கதை, வசனம் நா. யோகேந்திரநாதன்

இசை மோ. சொலமன்ராஜ்

நெறியாள்கை அ. அன்ரன்

இது முற்றுமுழுதாகவே எழில் கொஞ்சும் மன்னாரின் வளங்களைக் கொண்டு உருவாக்கம் பெற்ற வண்ணச் சித்திரம்

---

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய கடற்புலிகளின் வெளியீடான

# கடற்கரும்புலிகள்
# கடலின் மடியில்

(இரு பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள்)

இவை கடற் கரும்புலிகளினதும், கடற்புலிகளினதும் ஈகத்தையும் வீரத்தையும் கொண்டு உருவாக்கம் பெற்றவை

புதன்கிழமை பி. ப 4 மணிக்கு, யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் வெளியீட்டு விழாவோடு தமிழீழம் எங்கும் உலா வருகின்றன.

காணவும் கேட்கவும் தவறாதீர்கள்

(சி-10714)

# விஞ்ஞானம் O/L

# மாணவர் அரங்கு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

## ஓமின் விதி

1. சகல பௌதிக நிலைமைகளும் மாறாது உள்ள போது கடத்தி ஒன்றினூடாக செல்லும் மின் ஓட்டம் அக்கடத்தியின் முனைகளுக்கிடையே உள்ள மின்னழுத்த வேறுபாட்டிற்கு நேர்விகிதசமன்.

குறிப்பு:
1. சகல பௌதிக நிலைமைகள் என்பது வெப்ப நிலை, இழுவிசை வளைத்தல் என்பன அடங்கும்.
2. நேர்விகிதசமன்பற்றி மாணவர் இவற்றை அறிந்துகொள்ள வேண்டும்.
   அ) ஒரு கணியம் அதிகரிக்கும்போது அது சார்பான வேறு ஒரு கணியமும் அதிகரிக்குமாயின் அக்கணியங்கள் இரண்டும் நேர்விகிதசமனாகும்.
   ஆ) ஒன்றை மற்றதால் வகுக்கும்போது மாறாத பெறுமானம் கிடைக்கும்.
   இ) அக்கணியங்களுக்கு வரைபடம் அமைத்தால் உற்பத்திக்கூடாகச் செல்லும்.




3. ஓமின் விதியிலிருந்து நாம் பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்
பௌதிக நிலைமை மாறாதுள்ளபோது முனைகளுக்கு இடையிலுள்ள மின்னழுத்தத்தைக் கூட்ட மின் ஓட்டம் கூடும்.
4. ஓமின் விதியில் இருந்து பெற்ற தொடர்பு
$R = V/I$

5)

| கணியம் | குறியீடு | அலகு |
|---|---|---|
| தடை | R | Ω (ஓம்) |
| மின்னழுத்தவேறுபாடு | V | வோல்ற்று |
| மின் ஓட்டம் | I | அம்பியர் |

தடையைப் பாதிக்கும் காரணிகள்

அ) 1) வெப்பநிலை
2) கடத்தியின் நீளம்
3) கடத்தியின் தடிப்பு (குறுக்கு வெட்டு முகப் பரப்பு)
4) கடத்தியாக்கப்பட்ட பதார்த்தம்

ஆ) 1] கடத்தியின் நீளம் கூட தடை கூடும்
2] நீளத்திற்கு தடை நேர்விகிதசமனாகும்
$R \propto l$
$R/l = \propto - (1)$

இ) 1] குறுக்குவெட்டு முகப்பரப்பு கூட தடை குறையும்
2] குறுக்கு வெட்டுமுகப்பரப்பு தடைக்கு நேர் மாறுவிகிதசமன்
$R \propto 1/A$
$R.A = \propto - (2)$

ஈ] ∴ $\frac{R.A}{l}$ என்பது ஒரு மாறிலியாகும் இம் மாறிலி கடத்தியின் தடைத்திறனாகும்

$\frac{R.A}{l}$ = ரோ

தடைத்திறன் = $\frac{\text{தடை} \times \text{கு. வெ. மு. ப.}}{\text{நீளம்}}$

உ) தடைத்திறன் அலகு
1) Ω m
2) Ω Cm

ஊ) தடைத்திறன் கூட கடத்து திறன் குறையும் தடைத்திறன் குறைய கடத்து திறன் கூடும்.

எ] சிறந்த மின் கடத்திகள் மிகக்குறைந்த தடைத்திறனைக் கொண்டிருக்கும்

ஏ] கடத்து திறன் அலகு
1] $\Omega^{-1} . m^{-1}$

### ஆரம்பப் பயிற்சி வினாக்கள்

1. 12V மின்முதலுடன் ஒரு தடையை இணைத்தபோது 3 அம்பியர் மின் ஓட்டம் பாய்ந்தால் அதன் தடை யாது?
$R = V/I$
$= 12/3$
$= 4\Omega$

2. 3Ω தடையை 12V மின் முதலுடன் இணைத்தால் அதனூடாகப் பாயும் மின் ஓட்டத்தைக்காண்க
முறை 1 $R = V/I$ (ஓமின் விதிப்படி)
$3 = 12/I$
$3I = 12$
$I = 12/3$
$I = 4$ அம்பியர்
முறை 2 $I = V/R$ (எழுவாய் மாற்றத்தால்)
$= 12/3$
$= 4$ அம்பியர்

3. 6Ω தடையூடாக 1.5 அம்பியர் மின் ஓட்டம் பாய்ந்தால் அதன் மின்னழுத்த வேறுபாடு யாது?
முறை 1
$R = \frac{V}{I}$ (ஓமின் விதிப்படி)
$6 = \frac{V}{1.5}$
$V = 6 \times 1.5$
$= 9$ வோல்ற்று
$V = IR$ (எழுவாய் மாற்றத்தால்)
$= 1.5 \times 6$
$= 9$ வோல்ற்று

4. 12 cm நீளமும் 3 Ωம் தடையும் 0.006 $cm^2$ குறுக்கு வெட்டுமுகப்பரப்பும் உள்ள கடத்தியின் தடைத்திறன் யாது?
ரோ= $\frac{R.A}{l}$
ரோ= $\frac{3 \times 0.006}{12}$
ரோ= $\frac{0.006}{4}$
ரோ $= 0.0015\ \Omega\ cm$

5.




1) தடைகள் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
2) சமானத் தடை யாது?
3) மொத்த மின் ஓட்டம் யாது?
4) 2Ω தடையின் மின்னழுத்த வேறுபாடு யாது?

விடைகள்
1) தொடராக
2) $R = r_1 + r_2 + r_3$
$R = 3 + 1 + 2 = 6\Omega$
3) $I = V/R$
$= 12/6$
$= 2A$
4) $V = IR$
$= 2 \times 2$
$= 4$ வோல்ற்று

2.




1) தடைகள் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
சமாந்தரமாக
2) சமானத் தடையாது?
$1/R = 1/r_1 + 1/r_2$
$1/R = \frac{1}{3} + \frac{1}{6}$
$1/R = \frac{2+1}{6}$
$1/R = 3/6$
$3R = 6$
$R = 2\Omega$
3) மொத்த மின் ஓட்டம் யாது?
$I = V/R$
$= 12/2$
$= 6A$
4) 6Ω தடையூடாக செல்லும் மின்ஓட்டம்யாது?
$I = V/R$ (சமாந்தர நிலையில் மொத்த
$= 12/6$ மின்னழுத்தம் ஒவ்வொருதடை
$= 2A$ மின் மின்னழுத்தத்திற்கு சமன்)

### மின் ஓட்டத்தின் வெப்ப விளைவு

1. கடத்திகளினூடாக மின் ஓட்டம் செல்லும் போது இலத்திரன்கள் கடத்தியில் உள்ள அணுக்களில் மோதுவதனால் வெப்பம் தோற்றுவிக்கப்படுகிறது.
2. கடத்தியில் பிறப்பிக்கப்படும் வெப்பம் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.
   1) கடத்தியின் தடை
   2) கடத்தியினூடாக செல்லும் மின் ஓட்டத்தின் அளவு
   3) மின்னோட்டம் செல்லும் நேரம்
3. மேற்கூறப்பட்ட காரணிகள்அதிகரிக்கும்பொழுது மின் ஓட்டத்தின் அளவு அதிகரிக்கும். எனவே தடை, நேரம், மின் ஓட்டத்தின் வர்க்கம் என்பன பிறப்பிக்கப்படும் வெப்பத்திற்கு நேர் விகிதசமனாகும்
4. கடத்தியில் இலத்திரன் பாயும் பொழுது பிறப்பிக்கப்பட்ட சக்தி செய்யப்பட்ட வேலைக்கு நேர்விகித சமன். எனவே செய்யப்பட்ட வேலை பிறப்பிக்கப்பட்ட சக்திக்குசமன் என கொள்ளப்படுகிறது.
5. வெப்ப விளைவு தொடர்பான சமன்பாடுகள்
$E = VQ - (1)$
$Q = It - (2)$
எனவே $E = VIT - (3$
ஓமின் விதிப்படி $V = IR$
எனவே $E = I^2Rt - (4)$
ஓமின் விதிப்படி $I = V/R$ ஐ (3 ல் பிரதியிட
$E = V^2t/R - (5)$

சு. அருள்நேசன்

### வலு

ஒரு அலகு நேரத்தில் செய்யப்பட்ட வேலை அல்லது பிறப்பிக்கப்பட்ட சக்தி வலுவாகும்.
∴ t அலகு நேரத்தில் செய்த வேலை = Eயூல்
∴ 1 அலகு நேரத்தில் செய்த வேலை = E/tயூல்
எனவே வலு (P) பின்வரும் தொடர்புகளால் பெறப்படும்.
1) $P = VI$
2) $P = I^2R$
3] $P = V^2/R$

வலுவின் அலகு உவாற்று [W] ஆகும்

### பயிற்சி வினாக்கள்

1. ஒரு தடையை 12V மின் முதலுடன் 15 செக்கன்களுக்கு இணைத்து 5 அம்பியர் மின்னோட்டம் பாயவிடப்பட்டது.
   அ) பிறப்பிக்கப்பட்ட சக்தியைக் காண்க?
   ஆ) அதன் வலுவைக் காண்க?

விடை

வினா "அ" விற்கு Eக்குரிய எந்த தொடர்பை பயன்படுத்துவது என முடிவு செய்க, தரவாகவோ அல்லது வினாவாகவோ R [தடை] சம்பந்தப்படாமையால் R இடம்பெறாத $E = VIt$ ஐ பயன்படுத்துக.
$E = VIt$
$= 12 \times 5 \times 15$
$= 900 J$

வினா 1 (ஆ) வில்
முறை 1
15 செக்கனில் பிறப்பிக்கப்பட்ட சக்தி = 900J
∴1 செக்கனில் பிறப்பிக்கப்பட்ட சக்தி = 900/15
= 60W
∴ வலு
முறை 2 $P = VI$
$= 12 \times 5$
$= 60W$

(தொடரும்)

# விஞ்ஞானம் ஆண்டு 8

## பகுதி I

பின்வரும் வினாக்களுக்கு தரப்பட்ட விடைகளில் மிகப்பொருத்தமான விடையைத்தெரிவுசெய்க

1) பின்வருவனவற்றில் சடப்பொருள் அல்லாதது எது?
(i) நீர் (ii) வளி (iii) வெப்பம் (iv) வெண்கட்டி
2) பின்வருவனவற்றில் வடிவம் மாறாதது எது?
(i) நீராவி (ii) மண்ணெய் (iii) உப்பு (iv) இரசம்
3) பின்வரும் பொருட்களில் ஒரு மூலகமில்லாதது எது?
(i) காபன் (ii) நீர் (iii) இரசம் (iv) ஒட்சிசன்
4) புவியின் முழுப்பரப்பிலும் நிலத்தின் பங்கு
(i) $\frac{1}{2}$ (ii) $\frac{1}{3}$ (iii) $\frac{1}{4}$ (iv) 1/5
5) அபிவிருத்தி அடைந்த நாட்டில் மனிதன் ஒருவனுக்கு நாள் ஒன்றிற்கு தேவையான நீரின் அளவு
(1) 400 லீற்றர் (2) 100 லீற்றர் (3) 900 லீற்றர்
(4) 9000 லீற்றர்
6) மனிதனிற்கு நீர் பயன்படும் சந்தர்ப்பமாக கருதமுடியாதது
(i) பயிர் உற்பத்திக்கு (ii) பொருட்களை சுத்தப்படுத்த
(iii) தானியங்களைத்தூற்ற (iv) தும்புபிரித்தலிற்கு
7) வளி மனிதனிற்கு பயன்படும் சந்தர்ப்பங்கள் ஆவன
(i) மின்னை உற்பத்தி செய்ய
[ii] பொருட்களை குளிரச்செய்ய
[iii] நைதரசனைப்பெற
[iv] மேற்கூறிய யாவற்றிற்கும்
8] மனிதனிற்கு உணவு, உடை என்பவற்றை பெறபயன்படும் தாவரங்கள் முறையே
[i] மா பலா [ii] தென்னை, பருத்தி
[iii] பருத்தி, ஈரப்பலா [iv] யூக்கலிப்ரஸ், கொத்துமல்லி
(9) மனிதன் எந்த தேவையை விலங்கில் இருந்து பெறுவதால் விலங்கு அழிய நேரிடும்.
(i) பால் (ii) நிலத்தை பண்படுத்தல்
(iii) இறைச்சி (iv) கம்பளி
10) மனிதனிற்கு பயனளிக்கும் நுண்ணங்கி அல்லாதது
(i) மதுவம் (ii) பென்சிலியம்
(iii) பிளாஸ்மோடியம் (iv) மேற்கூறிய யாவும்
[11] வளி மாசடைவதனால் நாம் எதிர்நோக்கும் பிரச்சினை.
(i) சுவாசநோய் ஏற்படல் [ii] குருதி நஞ்சேறல்
(iii) பண்டைக்கால சிதைவுகள் அழிதல்
(iv) மேற்கூறிய யாவும்
[12] வானிலை மாற்றத்திற்கு காரணமாக அமைவன.
(i) வளிவெப்ப நிலை [ii] ஈரப்பதன்
[iii] வளிமண்டல அமுக்கம் [iv] மேற்கூறிய யாவும்
[13] இரவில் குடாக காணப்படுவது.
(i) நிலம் [ii] நீர் (iii) இரண்டும் (iv) இரண்டுமல்ல
(14) உலர்ந்த கோபாற்குளோரைட்டுத்தாளின் நிறம்.
[i] மென்சிவப்பு [ii] நீலம் [iii] பச்சை [iv] வெள்ளை
[15] பொதுவாக வானின் உயர்மட்டத்திலும் கீழ்மட்டத்திலும் காணப்படும் முகில்கள் முறையே;
[i] திரண்முகில், கீற்றுமுகில் [ii] படைமுகில், கீற்றுமுகில்
[iii] கீற்றுமுகில், படைமுகில் [iv] படைமுகில், திரண்முகில்
(16) சந்திரனைச் சுற்றி பரிவட்டத்தை ஏற்படுத்தும் முகில்
[i] உடைந்தமுகில் (ii) திரண்முகில்
[iii] கீற்றுப்படை முகில் [iv பனி
[17] எம்முகிலினூடாக சந்திரன் எளிதாக புலப்படும்;
(i) உச்சப் படைமுகில் (ii) மழைப்படை முகில்
(iii) கார்முகில் (iv) மேற்கூறிய யாவும்
(18) வானிலை அவதானத்திற்கு பயன்படாத கருவி
(i) காற்று வேகமானி (ii) ஈரமானி. (iii) பாரைமானி.
(iv) பாரமானி.
(19) ஆதிகால வாசிகள் பயன்படுத்திய சகுனங்களில் எந்த ஒன்று மற்றவற்றில் இருந்து வித்தியாசமான காலநிலைக்குரியது.
(1) சந்திரனைச் சுற்றி பரிவட்டம் தோன்றல்
(2) சேற்றின் மணம் வீச்சல்
(3) புகைவண்டி எஞ்சினின் சத்தம் மிகத்தொலைவில் தெளிவாகக் கேட்டல்
(4) சிறியஈறையான் சிறகுகள் கொண்டு வெளிவருதல்
(20) தற்பொழுது வானிலை ரேடார் தலைமை நிலையம் அமைந்துள்ள இடம்
i) யாழ்ப்பாணம்
ii கொழும்பு
iii திருகோணமலை
iv காலி
(21) ஞாயிற்றுத் தொகுதி என்பதனை கூடியளவு சரியாக கொண்ட கூற்று
(i) புவி உட்பட ஒன்பது கோள்களுமே ஞாயிற்றுத் தொகுதி ஆகும்.
(ii) சூரியனையும் அதை சூழ்ந்த ஒன்பது கோள்களும் சேர்ந்து ஞாயிற்றுத்தொகுதி ஆகும்.
(iii) சூரியனையும் அதை சுற்றும் கோள்கள் ஏனைய வான் பொருட்கள் யாவற்றையும் சேர்ந்த தொகுதியாகும்.
(iv) பல வெள் உடுத் தொகுதிகளின் அமைப்பையே ஞாயிற்றுத் தொகுதி என்கிறோம்.
(22) பின் வருவனவற்றில் மிகப் பிரமாண்டமானது எது
(i) ஞாயிற்றுத்தொகுதி [ii] அகிலம் [iii] வெள்ளுடுத்தொகுதி
(iv) பிரபஞ்சம்.
(23) பால்வீதி என்பது
[i] ஒரு வெள்ளுடுத் தொகுதி (ii) அகிலம்
(iii) ஒரு உடுத்தொகுதி (iv) பிரபஞ்சம்
24] பூரண சூரிய கிரகணத்தின் போது மட்டும் எமது கண்ணிற்கு தோற்றும் கோள் எது
[i] வியாழன் [ii] சுக்கிரன் [iii] புதன் [iv] சனி
25] கோள்கள் பூமியை மையமாக வைத்து சுற்றுகின்றது என்ற கொள்கை தவறானது என குறிப்பிட்டவர்
[i] தொலமி [ii] அரிஸ்ரோற்றில்
(iii) நிக்கலஸ் கொப்பானிக்கஸ் [iv] மேற்கூறியமூவரும்
26] பருமனின் அடிப்படையில் ஏறுவரிசையில் காணப்படும் கோள்களின் சரியான தொடர்
[i] சனி, வியாழன், புதன் [ii] புதன், சனி, வியாழன்
[iii] வியாழன் சனி புதன் (iv) புதன் வியாழன் சனி
27] மிக அண்மையில் வான்வெளியில் மோதிய கோளும், தூமகேதுவும் முறையே
(i) சனி ஹேலியின் வால்வெள்ளி
(ii) வியாழன் ஹேலியின் வால்வெள்ளி
(iii) வியாழன் ஷுமேக்கர்லெவி
(iv) சனி ஷுமேக்கர் லெவி
28] மீண்டும் மீண்டும் தோன்றும் வால்வெள்ளியின் பயணப்பாதை
(i) நீள்வளையமாகும் (ii) அதிபரவளைவானதாகும்
(iii) பரவளைவானதாகும் (iv) மேற்கூறிய எதுவுமில்லை
29] வளியில் இருந்து கண்ணாடிக்குற்றியின் ஒரு முகத்தில் செங்குத்தாக படும் ஒளிக்கதிர்
(i) செவ்வனை விலத்தி முறியும்
[ii] " நோக்கி "
(iii) முறிவடையாது நேராக செல்லும்
[iv] எதுவும் கூறமுடியாது
[30] குளத்தில் காணப்படும் மீன் ஒன்றிற்கு கல்லெறியும் மாணவன் அதில்பட எறியவேண்டியது
1) மீன்தெரியும் இடத்திற்கு குறிவைத்து
2) மீன் தெரியும் இடத்திற்கு சற்று மேலாக
3) மீன் தெரியும் இடத்திற்கு சற்று கீழாக
4) மீன் தெரியும் இடத்திற்கு வலமாக எறிய வேண்டும்.
31] பின்வருவனவற்றில் பிழையான கதிர்ப்படம் எது?




### அரியம்

32) கண்ணில் ஒளியின் செறிவைக் கட்டுப்படுத்தும் பகுதி
1. ஐரிசு 3. விழிவெண்படலம்
2. பிசிர்த்தசை 4. வன்கோதுரு
33) குறும்பார்வைக் குறைபாட்டை நிவர்த்திசெய்ய பயன்படுத்தும் வில்லை
1. குவிவு வில்லை 3. இரண்டும்
2. குழிவு வில்லை 4. உருளை வில்லை
34) கூட்டு நுணுக்குக் காட்டியில் பொருள்வில்லைபார்வை வில்லை என்பவற்றின் குவியத்தூரங்கள் எவ்வாறு காணப்படும்.
(i) இரண்டும் ஒரே அளவாக காணப்படும்
(ii) பார்வை வில்லையிலும் பொருள்வில்லையின் குவியத்தூரம் குறைவு
(iii) பார்வை வில்லையிலும் பொருள் வில்லையின் குவியத்தூரம் கூட
(iv) எப்படியும் இருக்கலாம்
35) முடிவிலியில் உள்ள பொருளை அதே இடத்தில் வைத்து உருப்பெருக்க பயன்படும் சாதனம்
(i) தனி நுணுக்குக்காட்டி (iii) சூள் பொருள்காட்டி
(ii) கூட்டு நுணுக்குக்காட்டி (iv) வானியல் தொலைக்காட்டி
36) தனிநுணுக்குககாட்டியில் பயன்படும் வில்லையும் தோன்றும் விம்பமும் முறையே
(i) குழிவு வில்லை உருச்சிறுத்த மாயவிம்பம்
(ii) குவிவு வில்லை உருப்பெருத்த மாயவிம்பம்
(iii) குழிவு வில்லை உருப்பெருத்த மாயவிம்பம்
(iv) குழிவு வில்லை உருப்பெருத்த உண்மை விம்பம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# விஞ்ஞானம்

37) பின்வரும் எந்த உணவு மற்றவற்றில் இருந்து வேறுபட்ட உணவு வகையைக் கொண்டது
 i) அரிசி ii) பருப்பு iii) மீன் iv) பால்

38. நாம் உணவை உட்கொள்வது
 i வளர்ச்சிக்காக ii சக்திக்கு iii அழிந்த இழையங்களை சீராக்க iv மேற்கூறிய யாவற்றிற்கும்

(39) ஒரேவகையான உணவைக் கொண்ட கூட்டம்.
 (i) பருப்பு, கோதுமை, மீன் [ii] சீனி, மீன், தேங்காய்
 (iii) எள், நிலக்கடலை, தேங்காய்
 [iv] பால், முட்டை, பாண்

[40] ஸ்கேவி நோய் ஏற்படுவது எவ் உயிர்ச்சத்துக் குறைவால்
 [i] B [ii] A [iii] C [iv] D

[41] சூரிய ஒளியில் இருந்து நாம் பெறும் உயிர்ச்சத்து
 (i) A (ii) D (iii) B (iv) E

(42) மிகக் கடுமையான புரத கலோரிப் போசணை இன்மையால் ஏற்படக் கூடிய குறைநோய்
 [i] மராசுமசு (ii) குவாசியோர்கோர்
 (iii) கண்டமாலை (iv) ஸ்கேவி

(43) நிலை மின்னேற்றம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
 (i) மின்னேற்ற மற்ற பொருள் தூசு துணிக்கைகளைக் கவராது
 (ii) ஒத்த ஏற்றம் ஒன்றை ஒன்று தள்ளும்.
 (iii) மின் ஏற்றம் அடைந்த பொருளால் மின் ஏற்றம் அடையாத பொருளைத் தொட்டால் அது மின் ஏற்றம்அடையும்
 (iv) ஒவ்வா ஏற்றம் ஒன்றை ஒன்று தள்ளும்.

(44) செலுலோசு அசற்றேற்று துண்டும் பட்டுத்துணியும் ஒன்றுடன் ஒன்று உரஞ்சப்பட்டது. இது தொடர்பானபின்வரும்கூற்றுக்களில் சரியானது.
 (i) இரண்டும் ஒரே மின் ஏற்றத்தைப் பெறும்.
 (ii) ,, ஒவ்வா ,, ,, ,,
 (iii) செலுலோசு அசற்றேற்று மட்டும் ,, ஏற்றமடையும்
 [iv] பட்டுத்துணி மட்டும் ,, ,,

45) தமிழீழ பிரதேசத்தில் மின் உற்பத்தி நிலையம் அமைந்திருந்த இடம்
 i) யாழ்ப்பாணம் ii) சுண்ணாகம் iii) கீரிமலை
 iv) பருத்தித்துறை

46) நீர் மின் உற்பத்தியின் போது நடை பெறும் சக்தி மாற்றத்தை சிறப்பாக காட்டுவது
 i) இயக்கசக்தி –> மின் சக்தி ii) அழுத்தசக்தி –> இயக்கசக்தி
 iii) அழுத்தசக்தி –> மின்சக்தி
 iv) அழுத்தசக்தி –> இயக்கசக்தி –> மின்சக்தி

47) பின்வருவன வற்றில வெப்பத்தை அரிதிற் கடத்துவது
 i) இரும்பு ii வெள்ளி iii) நீர் iv) அலுமினியம்

48) திண்மத்தின் ஊடாக வெப்பம் செல்லும் முறை
 i) கடத்தல் ii) மேற் காவுகை iV) கதிர்வீசல்
 4) மேற்கூறிய எதுவும் அல்ல.

49) பின்வருவனவற்றிற்கு ஒரே அளவு வெப்பம் வழங்கப்பட்டால் எதில் அதிகளவு விரிவு ஏற்படும்
 1) இரும்பு ii) நீர் iii வளி iv எல்லாம் ஒரேயளவே விரிவடையும்

50 வெப்பமானியில் கீழ் நிலைத்த புள்ளி
 i வளி வெப்பநிலை ii நீரின் கொதிநிலை
 iii பனிக்கட்டியின் உருகுநிலை iv மனித உடல் வெப்ப நிலையாகும்.

(51) மனித உடலின் வெப்ப நிலையை சரியாக காட்டுவது
 [1] 98.4°C (2) 37°F (3) 37°C (4) 212°F

(52) எரியும் குப்பையின் அருகில் நிற்கும் உமது உடலில் வெப்பம் படும் பிரதான முறை
 (1) கடத்தல் [2] மேற் காவுகை (3) கதிர் வீசல்
 [4] சரியாக கூற முடியாது.

(53) விசை பயன்படும் சந்தர்ப்பம்.
 (i) ஓய்விலுள்ள பொருளை இயக்க
 (ii) இயக்கும் பொருளை நிறுத்த
 (iii) திசைதிருப்ப
 (iv) மேற்கூறிய யாவற்றிற்கும்

(54) விசையின் அலகு
 (i) கிலோகிராம் (ii) நியூட்டன் (iii) இரண்டும்
 (iv) இரண்டுமல்ல

(55) ஒரு பொருளின் அடர்த்தி 5Kgm$^{-3}$ என்பதன் கருத்து
 (i) 5 கனமீற்றரில் 1 கிலோகிராம் காணப்படும்
 (ii) 1 ,, ,, 1 ,, ,,
 (iii) 5 ,, ,, 5 ,, ,,
 (iv) 1 ,, ,, 5 ,, ,,

## பகுதி II

மனிதனது சூழல் உயிரினங்களாலும் உயிர் அற்ற கூறுகளாலும் ஆக்கப்பட்டுள்ளது. மனிதன் தனது சூழலில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி தனது வாழ்க்கையை திறம்பட நடத்துகின்றான்.

 i) சூழல் என்பதில் இருந்து நீர் யாது விளங்குகின்றீர்?
 ii) சூழலில் உள்ள உயிரினங்கள் என்பதில் எவை எவை அடங்கும்
 iii) சூழலை ஆக்கும் உயிரற்ற கூறுகள் எவை?
 iv) பயிர்ச்செய்கையை மனிதன் மேற்கொள்ள அவனிற்கு உதவும் சூழலில் உள்ள உயிர் உள்ள கூறுகளையும் உயிரற்றகூறுகளையும் தருக?
 v) அவை ஒவ்வொன்றும் எவ்வாறு பயன்படுகின்றன என தருக?
 vi] செங்கல் உற்பத்திக்கு சூழலில் உள்ள எவ்வெவற்றை மனிதன் நேரடியாக பயன்படுத்துகின்றான்?
 vii) மின் உற்பத்திக்கு சூழலில் எவற்றின் வலுக்களை பயன்படுத்துகின்றோம்?
 viii) தமிழீழத்தில் மேற்குறித்த எவற்றின் வலுவை இலகுவாக பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.
 ix) சூழலை மாசடையாது தடுக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினர் எடுக்கும் நடவடிக்கை யாது?
 x) மனிதன் ஏன் காடுகளை அழிக்கின்றான்?

2. பாரமானி, வெப்பமானி, ஈரமானி, ரேடார், காற்றுவேகமானி, வானொலி சொண்ட், மழைமானி போன்ற சிலசாதனங்கள் ஓர் ஆய்வுசாலையில் காணப்படுகின்றன இவை தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடைதருக?
 1. மேற்குறித்த உபகரணங்கள் பொதுவாக எதை அறிவதற்கு பயன்படுத்தப்படுகின்றன?
 2. மேற்குறித்த சாதனங்களில் தற்காலத்தில் பயன்படுத்தப்படுவது எது, அதனுடன் இங்குகுறிப்பிடப்படாத ஒரு சாதனத்தையும் தருக?
 3. மேற்குறித்தவற்றில் வளியில் உள்ள நீரினளவை எதனால் அறியலாம்?
 4. வளியின் அமுக்கம் எதனால் அளவிடப்படுகிறது
 5. கடல்மட்டத்தில் பாரமானி காட்டும் அளவீடு எத்தனை மில்லிபார் ஆகும்?
 6. வளிமண்டலமாற்றங்களை ஏற்படுத்தும் மூன்று காரணிகளைத் தருக?
 7. வளிமண்டலமாற்றங்களை நாம் ஏன் அறிந்து கொள்ள வேண்டும்?
 8. முகில் கூட்டத்தின் தன்மை, அளவு என்பன எச்சாதனத்தால் அறியப்படுகிறது?
 9. நீர் அறிந்த இருவகையான ஈரமானிகளைத் தருக?
 10. தெற்கில் இருந்து வடக்கு திசையாக காற்று வீசினால் காற்றுத்திசைகாட்டியின் அம்பு எத்திசையை நோக்கிஅமையும்?

3. அரிசி, மீன், சீனி, பால், பருப்பு எள்ளு, வாழைப்பழம் என்பன தொடர்பான வினாக்களுக்கு விடை தருக?
 1. மேற்தரப்பட்ட உணவுகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் உணவுவகைகளைத் தருக?
 2. எவ்வுணவில் நைதரசன் ஒரு மூலகமாக காணப்படும்?
 3. சக்திக்கு பயன்படும் உணவுகள் எவை?
 4. வளர்ச்சிக்கு பயன்படும் உணவுகள் எவை?
 5. சூடாக்க ஊன் கருகும் மணத்தைக் கொடுக்கும் உணவு எது?
 6. அயடினுடன் நீல நிறத்தைக் கொடுக்கக் கூடிய உணவு எது?
 7. எதன் கரைசல் பெனடிக்கின் கரைசலுடன் சூடாக்க செங்கட்டி செந்நிற வீழ்படிவைக் கொடுக்கும்?
 8. எதை கடதாசியில் வைத்து நசிக்கும் பொழுது உலராத எண்ணைக் கறைதோன்றும்?
 9) உடனடிச்சக்தியை கொடுக்கக்கூடியது எது?
 10 நிறை உணவு எது?

4 பின்வருவனவற்றிற்கு விஞ்ஞான விளக்கம் தருக?
 i எல்லா வால் வெள்ளிகளும் மீண்டும் மீண்டும்தோன்றுவதில்லை
 ii நீர் மின் உற்பத்தியே எமது நாட்டிற்கு சிறந்தது
 iii நீருள்ள தொட்டி ஆழம் குறைவாக தெரிதல்
 iv உயர்ந்த கட்டிடங்களின் மேல் கூரிய கம்பிகள் வைக்கப்படல்
 v இலங்கையின் மத்திய பகுதியில் வாழ்பவர்கள் கண்டமாலைக்கு ஆளாவர்.




 1. A, B, C, D என்பன எவ்வகையான கருவிகள்
 2. Aயில் எச் செயற்பாடு காட்டப்பட்டுள்ளது
 3. உரு Aயில் AO, OB, BC, NN', $\hat{AON}$ $\hat{BON'}$ இன் பெயர்களைத் தருக
 4. B யில் ஒலிக்கதிரின் பாதையை வரைந்து முடிக்குக.
 5. Bயில் வெள் ஒளி செலுத்தி திரையில் விழவிடப்பட்டால் உமது அவதானம் யாது?
 6. வினா 5-ல் கூறும் செயற்பாட்டை இயற்கையில் நீர் எப்பொழுது காண்பீர்
 7. கமராவில் பயன்படுத்தப்படும் சாதனம் எது
 8. Dயை பயன்படுத்தும் ஒரு சந்தர்ப்பம் தருக
 9. இச்சாதனங்களில் எது போன்ற அமைப்பு எமது கண்ணில் காணப்படுகிறது.
 10. Dயில் முதலச்சிற்கு சமாந்தரமாக ஒலிக்கதிர்களைச் செலுத்தினால் அவை எவ்வாறு வெளியேறும்.

6. மாணவன் ஒருவனின் குறிப்புக் கொப்பியில் காணப்பட்டசில உடுக்கோலவுருக்களை படம் காட்டுகிறது இது தொடர்பான கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக?




 1. A,B,C ஒவ்வொன்றும் எவ் உடுத்தொகுதிகள் என தருக?
 2. Aயில் முக்கோணம் எத்திசை நோக்கி இருக்கும்?
 3. Cயில் வில் எத்திசை நோக்கி இருக்கும்?
 4. உடுக்கோலங்களை அவதானிக்க எத்தகைய நாளை நீர் தெரிந்தெடுப்பீர்
 5. A தோன்றும் போது இதற்கு கிழக்கே தோன்றும் உடுத்தொகுதியையும் அதில் பிரகாசமாக தெரியும் உடுவின் பெயரையும் குறிப்பிடுக?
 6. B வேட்டைக்காரனுக்கு எத்திசையில் தோன்றும்?

## பகுதி 1 இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) iii | 11) iv | 21) iii | 31) i | 41) ii | 51) iii |
| 2) iii | 12) iv | 22) iv | 32) i | 42] ii | 52) iii |
| 3) ii | 13) ii | 23) i | 33) ii | 43) iv | 53) iv |
| 4) iii | 14) ii | 24) iii | 34) ii | 44) ii | 54) ii |
| 5) iii | 15) iii | 25) iv | 35) iv | 45) ii | 55) iv |
| 6) iii | 16) iii | 26) ii | 36) ii | 46) iv | |
| 7) iv | 17) i | 27) ii | 37) i | 47) iii | |
| 8) ii | 18) iii | 28) i | 38) iv | 48) i | |
| 9) iii | 19) iii | 29) iii | 39) iii | 49) iii | |
| 10) iii | 20) iii | 30) iii | 40) iii | 50) iii | |

## பகுதி II விடைகள்

வினா 1
 i அங்கிகள் வெற்றிகரமாக வாழக்கூடிய இடம் சூழலாகும்
 ii தாவரங்கள், விலங்குகள்
 iii ஒளி, நீர், நிலம்
 iv தாவரம், விலங்கு, நுண்ணங்கி
 v தாவரம் பசளைகளைப் பெற
 விலங்கு ,, ,, வேலையைச்செய்ய
 நுண்ணங்கி பசளையை உக்கச்செய்து மண்ணை வளமாக்க
 vi மண், நீர்
 vii வளி, நீர்
 viii காற்றுவலு
 ix (1) தாவரம் வெட்டுவதை தடுத்தல் புதிய காடுகளை அமைத்தல்
 x பயிர்ச்செய்கை, குடியிருப்பு நிலம்பெற எரிபொருள்பெற

வினா 2
 i வானிலை மாற்றங்கள்
 ii ரேடார், இங்கு குறிப்பிடப்படாதது செய்மதி
 iii ஈரமானி
 iv பாரமானி
 v 1013 மில்லிபார்
 vi வெப்பம், அமுக்கம் ஈரப்பதன்
 vii பாதகமான சூழ்நிலையை முன்கூட்டி அறிந்து அதிலிருந்து பாதுகாப்பை பெறவும் சாதகமான சூழ்நிலையை அறிந்து பயன்படுத்தவும்
 viii செய்மதி
 ix மயிர் ஈரமானி மரச்சீவல் ஈரமானி
 x தெற்கைநிற்கும்

வினா 3
 i. அரிசி - மாப்பொருள் மீன் - புரதம்
 சீனி - வெல்லம் பருப்பு - புரதம்
 பால் - புரதம் எள்ளு - இலிப்பிட்டு
 வாழைப்பழம் - வெல்லம்
 ii பால், பருப்பு, மீன்
 iii சீனி, அரிசி, வாழைப்பழம், எள்ளு
 iv மீன், பால் பருப்பு
 v மீன், பால் ,பருப்பு
 Vi அரிசி
 vii சீனி, வாழைப்பழம்
 viii எள்ளு
 ix சீனி
 x பால்

வினா 4

### சு. அருள்நேசன்

 i நீள்வட்டப்பாதையில் இயங்கும் வால் வெள்ளி மட்டும் தான் மீண்டும் மீண்டும் தோன்றும். எல்லா வால் வெள்ளிகளும் நீள் வட்டப்பாதையில் இயங்குவதில்லை அவை பரவளைவு, அதிபரவளைவாக செல்வதால் மீண்டும் தோன்றாது எனவே எல்லா வால் வெள்ளியும் மீண்டும் மீண்டும் தோன்றாது
 ii நீர் இயற்கை வளம் எனவே எரி பொருட் செலவு இல்லை அத்துடன் சூழல் மாசடையாது எனவே நீர்மின் உற்பத்தியே சிறந்ததாகும்.
 iii நீரில் இருந்து வளிக்கு ஒளிக்கதிர் வரும்போது செவ்வனை விலத்திமுறியும் இதனால் அக்கதிரை அவதானிக்கும் போது அடித்தளம் உயர்ந்து தெரியும்.
 iv மின்னலின் போது புவிக்குபாயும் இலத்திரன்கள் கட்டிடத்தில் மோதாது கடத்தியினூடாக புவிக்கு கடத்தப் படுவதற்காக உயர்ந்த கட்டிடங்களின் மேல் கூரிய கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவை மின்னல் கடத்திகள் ஆகும்
 v எமக்கு அயடீன் தேவையாகும் எமக்கு தேவையான அயடீனை கடல் உணவில் இருந்து பெறுகிறோம் மத்திய பகுதியில் வாழ்பவர்களுக்கு கடல் உணவு போதியளவு கிடைக்காது எனவே அயடீன் குறைவால் இவர்களுக்கு கண்டமாலை ஏற்படுகிறது

வினா 5
 i A கண்ணாடிக்குற்றி B - அரியம்
 C - குவிவுவில்லை D - குழிவுவில்லை
 ii ஒளி முறிவு
 iii AO - படுகதிர் OB - முறிகதிர் BC - வெளிப்படுகதிர்
 NN' - செவ்வன் $\hat{AON}$ - படுகோணம்
 $\hat{BON'}$ - முறிகோணம்
 iv



 v திரையில் நிறப்பட்டை ஒன்றை அவதானிக்கலாம் [திருசியநிறமாலையை) அவதானிக்கலாம்.
 vi மழை தூமிக்கும் போது சூரியஒளி இருந்தால் (வானவில்)
 vii C
 viii குறும்பார்வைக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய
 ix C
 x விரிந்து செல்லும்

வினா 6
 1 A- சிம்மம் B- மிதுனம் C- விருச்சிகம்
 2 கிழக்கு
 3 மேற்கு
 4 முகில்கள் அற்ற அமாவாசை இரவு
 5 இடையர், ஆக்டோறஸ்
 6 வடகிழக்கு


### யாழ்ப்பாண மாநகரசபை

## கழிவுகள் அகற்றல் தொடர்பான அறிவித்தல்

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள குடிமனைகள், உணவகங்கள், மற்றும் ஸ்தாபனங்களிலுள்ள மலக்குழிக்கழிவுகள், மற்றும் திரவக்கழிவு, போன்றவற்றைக் காலத்துக்குக் காலம் அகற்றுவதற்கு வசதியாக எம்மால் கழிவு அகற்றும் வாகனம் ஒன்று உருவாக்கப்பட்டு, சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதே போன்று, வளவினுள் பாரிய அளவில் சேரும் குப்பை கூழங்களையும் அகற்றுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சேவைகளுக்கெனசிறிய அளவிலான கட்டணம் அறவிடப்படும்.

நல்லூரில் அமைந்தள்ள சபையின் பிரதான அலுவலகத்தின் வாகனப் பிரிவு அத்தியட்சகருடனோ, அல்லது பொதுசனத்தொடர்பு அதிகாரியுடனோ இவ்வாறான சேவைகள் பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர அலுவலகம்
யாழ்ப்பாணம் 94-11-14

(சி-10715)



## ARE THESE YOUR NEEDS?

From this year the Statistics Branch of the Tamil Eelam Econom c De elopment Organisation has expanded their activities in a arge scale

(1) *Surveys regarding a Village for those interested in the development of this Village.*
(2) *Surveys on a particular social section.*
(3) *Surveys on consumer satisfaction on a particular product.*

Could be provided with consultancy service for undertaking such surveys, or could undertake a complete survey and provide you a survey report The Statistics Branch of the Tamil Eelam Economic Development Organisation with consultants who have many years of experience in this field are now available for such services- In addition, we supply required statistics for

★ *Research personnels for writing research reports.*
★ *University students.*
★ *School Teachers, Students and Others.*
★ *We are also in a position to prepare and provide survey reports on required Subject to Government and Non-Government Social Service Organisations.*

For further information, please contact
Statistics Branch
**Tamil Eelam Economic Development Organisation**
**Thavady.**

(சி-10712)

## சிந்தனைக்கு

நெருப்புமிக்க நிகழ்வுகள், பலவேளைகளில் சின்னஞ் சிறு சந்தர்ப்பங்களிலிருந்து உதிக்கின்றன.

- லிவி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-11-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# பயன்படுத்துவது அரசின் பொறுப்பு

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அரசாங்கம் பதவி ஏற்றதைத் தொடர்ந்து தமது நல்லெண்ண வெளிப்பாடாக ஒரு வாரகால தற்காலிக போர் இடைநிறுத்தம் ஒன்றை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அறிவித்துள்ளார். இதன் பிரகாரம் விடுதலைப் புலிகள் இயக்கம் தாம் தாக்கப்பட்டாலன்றி ஒருவாரகாலத்திற்கு தமது இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைத்துள்ளது எனலாம்.

இதேசமயம் இப்போர் இடைநிறுத்தம் தொடர்பான பணிப்பு தலைவர் பிரபாகரனினால் தமது போராளிகளுக்கு விடப்பட்டுள்ளதே ஒழிய அரசாங்கத் தரப்பிற்கு இது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. ஆனால் இது சிறிலங்கா அரசாங்கத்திற்கு தெரியாத விடயமாக இல்லை. அரசாங்கம் இது தொடர்பாக அறிந்து கொண்டுள்ளதோடு அதனை வெளிப்படுத்தியும் உள்ளது.

அத்தோடு இப்போர் இடைநிறுத்தம் குறித்து விடுதலைப்புலிகள் இயக்கம் எதுவித நிபந்தனைகளையோ அன்றி அறிவுறுத்தல்களையோ அரசாங்கத்திற்கு விடவுமில்லை - முன் வைக்கவுமில்லை. அந்த வகையில் அரசாங்கத்திற்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக மட்டுமே இது காட்டப்பட்டுள்ளது என்பதில் கேள்விக்கே இடமில்லை.

இந்த வகையில் விடுதலைப்புலிகளின் நல்லெண்ண சமிக்ஞையை அரசாங்கம் எவ்வாறு எடுத்துக் கொள்ளப் போகின்றது என்பதைப் பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கலாம். இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என்றே ஜனாதிபதி சந்திரிகா கூறி வருகிறார். ஜனாதிபதி பதவி ஏற்ற பின்னர் நடைபெற்ற முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் கூட சமாதானப்பேச்சுக்களை நிறுத்துவதற்கு எந்தவித காரணமும் இல்லை எனத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் புலிகள் அறிவித்துள்ள போர் இடைநிறுத்தத்தை எவ்வாறு பயன்படுத்தி சமாதான முயற்சிகளை முன்னேற்றமடையச் செய்வது என்பது அரசாங்கத்தின் பொறுப்பே ஆகும்.

ஏற்கனவே விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை அரசாங்கமே இடைநிறுத்தியிருந்தது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரே அடுத்த கட்டப் பேச்சுக்கள் இடம்பெறும் என அரசியல் வட்டாரங்களில் பேசவும் பட்டது. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்பும் பேச்சுக்கான திகதிகள் எவையும் அறிவிக்கப்பட்டதாக இல்லை. எப்பொழுது பேச்சுவார்த்தைகள் தொடரும் என்ற கேள்விக்கு ஜனாதிபதி அளித்த பதிலும் திருப்தியாக இல்லை.

இந்நிலையில் சந்திரிகா அரசிற்கான நல்லெண்ண சமிக்ஞையாக போர் இடைநிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டமையானது விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானத்திற்கு தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவின் வெளிப்பாடு என்றே கொள்ள முடியும். இதனை அரசாங்கம் ஏற்ற முறையில் பயன்படுத்த தவறின் அரசாங்கத்தின் சமாதானம் குறித்த அறிவிப்பில் ஐயப்பாடு கொள்வதைத் தவிர வேறு வழியில்லாது போகலாம்.

இதேசமயம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த 'விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள போர்நிறுத்தத்திற்கு ஏற்ப ஆக்கபூர்வமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்' எனத் தெரிவித்துள்ளமையானது ஓரளவிற்கு நல்லதொரு சமிக்ஞையாகவே கருத முடியும். இது சமாதான முயற்சிகளை ஊக்குவிக்க உதவக் கூடியதாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னேற்றமடைய வேண்டுமானால் போர் நிறுத்தம், பொருளாதாரத்தடை நீக்கம், போக்குவரத்துப் பாதை திறப்பு ஆகிய விடயங்களில் அரசாங்கம் தீவிர அக்கறை காட்ட வேண்டும்என வலியுறுத்தி வருகின்றனர் இந்த நிலையில் அரசாங்கமும் சமாதானப் பேச்சுக்கள் அடுத்த கட்டத்தை எட்டுவதற்கு இவ்விடயங்களில் முன்னேற்றகரமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

இல்லாது விடின் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களுக்குக் காட்டும் சமிக்ஞைகளில் பெரும் பயன்இராது; அது பேசுவதைத் தவிர நடைமுறைக்கு உகந்ததாக இருக்கமாட்டாது; விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் பேச முன் வந்தமை பலவீனத்தின் அடிப்படையில் இல்லை என்பது அரசாங்கத்திற்கே நன்கு தெரியும்; இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வைக் கொண்டு வருவதற்கு விடுதலைப்புலிகள் வழங்கிவரும் ஒத்துழைப்பையும் அரசாங்கம் மறுப்பதற்கில்லை; இந்நிலையில் புலிகள் போர் இடைநிறுத்தத்திற்கு நிபந்தனைகள் எவையும் வைக்காதுவிட்டாலும் அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து அதற்கேற்பச் செயற்படவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

### ஓய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு தற்போது யாழ் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுகின்றது (22)

### விஞ்ஞான மூலவள நிலையம்திறக்கப்படும்

(வடமராட்சி)

கரவெட்டி கல்விக்கோட்டத்தில் விஞ்ஞான மூலவள நிலையம் ஒன்றை திறப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையத்தை திறக்க வலயம்-2 கணித மூலவள உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த நிலையம் கரவெட்டி கோட்டத்தில் அடுத்தவருடம் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிலையத்தை அமைப்பதற்குரிய தகுந்த பாடசாலையை தேர்ந்தெடுக்க கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு சி. சிவராசா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

மெல்லக்கற்கும் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் வகையில் இந் நிலையம் திறக்கப்படவுள்ளது. இம் மாணவர்களின் நலன் கருதி வடமராட்சியில் இரண்டு கணித மூலவள நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### பரிசளிப்பு விழா

சென். பற்றிக்ஸ் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் ஆயர் அதி வண; தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக மன்னார் ஆயர் அதிவண ஜோசப்புங்சௌரவவிருந்தினராக யாழ் பல்கலைக் கழக பதிவாளர் பரமேஸ்வரனும் பங்குபற்றுவர்.

### வீதியில் விழுந்து மூதாட்டி மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் நடந்து சென்ற மூதாட்டி தடுக்கி விழுந்து மரணமான சம்பவம் ஒன்று சென்ற வியாழன் காலை யாழ் பிரதான வீதிப் பகுதியில் இடம்பெற்றது மிருசுவில் பகுதியில் வசித்து வந்த திவகந் கரம்பனைச் சேர்ந்த எலிசபெத் ஜோசப்(வயது70) என்ற மூதாட்டியே இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆவார். குருநகர்ப் பகுதியில் உள்ள உறவினரின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது பிரதான வீதியில் யாழ்-மாவட்ட விவசாய சமாசத்தின் முன்னால் விழுந்தே இவர் இவ்வாறு மரணமானதாகவும் தமிழீழ காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் கூறப்படுகின்றது. (22)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 11. 16**

**புதன் இரவு**

08.01 - குயிலோசை - நிகழ்ச்சியில் சு. அரசண்ணா எழுதிய ''பைந்தமிழீழத்து பனைவளம்'' கிராமிய நிகழ்வு
08.10 - ஏர்முனை
08.30 - செய்திகள்
08.40 - நாடகம் - மலரன்னை எழுதிய ''தரிசனம்''
09.00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994. 11. 17**

**வியாழன் காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - விடுதலைகீதங்கள்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08.00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# திருமலை கிராமங்களுக்கு பொருட்கள் எடுத்து செல்ல படையினர் கெடுபிடி

(திருகோணமலை)

திருகோணமலைமாவட்டத்தின் கிராமங்களில் வாழும் மக்களுக்குப் பலரகமான பாவனைப் பொருட்களும், அத்தியாவசிய பொருட்களும் சட்டப் பொருட்களும், எரிபொருள் வகைகளையும் எடுத்துச்செல்வதில் படையினர் தொடர்ந்து கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

கிராமங்களில் வாழும் மக்கள் தமக்குத் தேவையான இப் பொருட்களை எடுத்து வருவதற்கு அவ்வப்பகுதியில் இருக்கும் இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கு அமைவாகவே நடந்து கொள்ள வேண்டிய நிலை தொடர்ந்து காணப்படுகிறது.

நகரப்புறங்களில் இருக்கும் கடைகளில் இருந்து இப்பொருட்களை கொள்வனவு செய்து எடுத்து வருவதற்கும் கூட இராணுவ முகாம் பொறுப்பதிகாரியின் எழுத்து மூல அனுமதி கோரப்படுகிறது இதனால் கிராமங்களில் வாழும் மக்கள் தமக்கான அன்றாட உணவுப்பொருட்களை எடுத்து வருவதற்குக் கூட இராணுவ அதிகாரியின் அனுமதியை பெறுவதற்காக முகாம்களில் நீண்ட நேரம் காத்திருக்க வைக்கப்படுகின்றனர்.

மேலும் மாதாமாதம் உணவுப்பொருட்கள், பாவனைப்பொருட்கள், எரிபொருளாக மண்ணெண்ணெய் என்பன குறிப்பிட்ட அளவுகளில் மட்டுமே எடுத்துவர அனுமதிக்கப்படுகின்றது அத்துடன் அரிசி, சீனி, கோதுமைமாவு, தீப்பெட்டி, தேங்காய்எண்ணெய், மண்ணெண்ணெய், பால்மா வகைகள், சவர்க்காரம் போன்ற பொருட்களும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் எடுத்து வருவதை படையினர் தடுத்து வருகின்றனர்.

இராணுவத்தினரின் இச் செயற்பாட்டால் கிராமப் புறங்களில் வாழும் சாதாரண மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டி இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

## 800க்கு மேற்பட்டோர் முகாம்களில் தடுத்துவைப்பு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் 11 தடுப்பு முகாம்களிலும், சுமார் 800க்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு எதிராக எதுவித விசாரணையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இவர்களில் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டோர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டவர்கள். சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு எதுவித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டவர்கள் என மூத்தரப்பினரும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அறவிட்ட கடன்களை மீளவும்வழங்கக் கோரிக்கை

(மட்டக்களப்பு)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு உடைமைகளை இழந்த ஊழியர்கள் இழப்புகளுக்காகப் பெற்றஇரண்டு வருட சம்பள முற்பண கடனையும், அக் கடனுக்காக அறவிடப்பட்ட வட்டியையும் அரசாங்கம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஊடாக திரும்பவும் வழங்க வேண்டுமென மண்டூர் நலன் விரும்பிகள் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளால் உடைமைகளை இழந்த அரசாங்க ஊழியர்கள் இருவருட சம்பளப்பணத்தை கடனாகப் பெற முன்பு வசதி செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. எனினும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இத்தகையவர்களுக்கு றேபியா ஊடாக ஒன்றரை லட்சம் ரூபாவை நட்ட ஈடாக இப்போது வழங்கி வருகிறது.

எனினும் அரசாங்கத்தின் சம்பளக் கடனைப் பெறாதவர்களே றேபியாவின் கடனைப் பெற முடிகிறது. இதனால் தான் உடமைகளை இழந்த அரசாங்க ஊழியர்கள் இத்தகைய கோரிக்கையை முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## கமநல சேவை அலுவலகம் மூடிவிடும்படி உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இயங்கி வந்த கமநல சேவைகள் பிரதி ஆணையாளர் அலுவலகத்தை உடனடியாக மூடிவிடும்படி கமநல சேவை ஆணையாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரண்டு மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பாக மேற்படி பிரதி ஆணையாளர் அலுவலகம் செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது

## தற்கொலை படையாளிபற்றி தகவல் கிடைக்கவில்லை

### பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)

பாலத்துறைக் குண்டுவெடிப்பு சம்பவத்தோடு தொடர்பான சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தற்கொலை படையாளி என சந்தேகிக்கப்படும் பெண்ணை அடையாளம் காணக் கூடிய எந்த ஒரு தகவல்களும் கிடைக்கவில்லையெனவும் புலனாய்வில் ஈடுபட்டுள்ள பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சம்பவம் நடந்த இடத்தில் இருந்த மூன்று நபர்களை பற்றிய தகவல்களை பெற உதவுமாறு பொலிசார் மீண்டும் மக்களை கோரியுள்ளனர்.

காமினி கொலை குறித்து ஆராய

## இந்திய தடய நிபுணர் கொழும்பு வருவார்

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவின் மரணம் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொள்ளுவதற்காக இந்திய தடய அறிவியல் நிபுணர் சந்திரசேகரன் விரைவில் கொழும்பு வரவுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குண்டு வெடிப்புக்கு காரணமென கூறப்படும் பெண்ணின் தடயங்களை விஞ்ஞானரீதியாக ஆராய்ந்து குற்றவாளியை கண்டு பிடிப்பதற்கு முயலப் போவதாக அவர் ஹிந்து பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

## அவசரகால சட்டம் நீடிப்பு ஐ. தே. க. எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிகளிலும் அதன் எல்லைப்பகுதியில் உள்ள சில பகுதிகளிலும் கொழும்பு மாநகர சபை எல்லை அதனைசுற்றிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணைக்கு எதிராக ஐ. தே. க. வாக்களிக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் நாட்டில் சமாதானம் ஏற்படுத்த அரசு தவறியிருப்பதாலும் அவசர கால சட்டம் நீடிக்கப்பட்டால் தமது கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்படுவர் என்பதாலும் தாம் இந்த பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கப்போவதாக கூறினார்.

### நோயாளர் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ், போதனா வைத்தியசாலைக்கு பல்வேறுபட்ட நோய்கள் காரணமாக பெருந்தொகையான நோயாளர்கள் தினசரி வந்து செல்கின்றனர்.

தொடர்ந்து பெய்து வந்த பெருமழையினால், காய்ச்சல் மலேரியா, மூளைக்காய்ச்சல், சிரங்கு, நெருப்புக்காய்ச்சல் போன்ற பல நோய்களுக்கு சிகிச்சைபெற தினசரி 350 க்கும் மேற்பட்டோர் செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எதிர்கால வாழ்விற்கு இன்றைய கல்வி பயனற்றது

- க. அருண்மாஸ்ரர்

''இக்காலக் கல்வி மாணவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு சரியான பிரயோசனம் அளிப்பதாக அமையவில்லை வணிகக் கல்வி படித்த மாணவர்களை நிதித்துறைக்கு பணிக்கமர்த்துவதற்கு எடுக்கும்போது அவர்களுக்கு மேலதிக பயிற்சியளிக்க வேண்டியிருக்கிறது.

இவ்வாறு தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. க. அருண்மாஸ்டர் வைத்தீஸ்வர கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தின் 'வணிக ஒளி' மலர் வெளியீட்டுவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ் விழா கடந்த வெள்ளிக்கிழமை காலை மேற்படி கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் மன்றத் தலைவர் செல்வன் சி ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

'' பல்கலைக்கழகத்தில் இப்போது வணிகத்துறை. முகாமைத்துவதுறை என இரு துறைகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் இத்துறை மூன்று துறைகளாகப் பிரிக்கப்படவுள்ளன என பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவதுறைத் தலைவர் திரு மா. நடராஜசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு: து. சந்தோஷம் தனது உரையில் வர்த்தக மாணவர்களது முயற்சியையும் வளர்ச்சியையும் பாராட்டினார்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட நிதி உதவியாளர் திரு. க கனகரத்தினம் மலர் மதிப்பீட்டுரை நிகழ்த்தினார் மலர் ஆசிரியர் செல்வன் சி. தனேந்திரன் பதிலுரையும் மன்றச் செயலர் திரு ஆ திலீபன் நன்றியுரையும் வழங்கினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## மாவீரர் எழுச்சிவாரத்தின் இன்றைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி இன்று வட்ட ரீதியாக எழுச்சிவாரக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் சிரமதானங்களும் நடைபெறவுள்ளன. இன்றைய எழுச்சிவாரக் கூட்டங்கள் அனைத்து வட்டங்களிலும் இரவு 7 30 க்கு ஆரம்பமாகின்றன.

வலிகாமக் கோட்டத்தில் யாழ் வட்டத்தில் சுண்டுக்குழி வடக்கு சன சமூக நிலையம் மாவீரர் சனசமூக நிலையத்திலும். கோப்பாய் வட்டத்தில் ஆவரங்கால் சர்வோதயா சந்தி. சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்திலும், நல்லூர் வட்டத்தில் கோண்டாவில் நாராயணன் சனசமூக நிலையத்திலும் சிறிகணேசா சனசமூக நிலையத்திலும் சண்டிலிப்பாய் வட்டத்தில் நவாலி மதியொளி சனசமூக நிலையம் சண்டிலிப்பாய் நந்தல் சனசமூக நிலையத்திலும் சங்கானை வட்டத்தில் பண்டத்தரிப்பு கலைவாணி சனசமூக நிலையம், சங்கானை சிறிபாரதி சனசமூக நிலையத்திலும், உடுவில் வட்டத்தில் தாவடி சிறிகாளி அம்மன் சனசமூக நிலையம், தாவடிமத்திய சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி கோட்டத்தில், பளைவட்டத்தில் முகமாலையடி மாவீரர் பாடசாலையிலும், கொடிகாமம் வட்டத்தில் மந்துவில் மரக்கார் சனசமூகநிலையத்திலும்,சாவகச்சேரி வட்டத்தில் அப்பச்சி மாவடி சித்திவிநாயகர் கலாமன்றத்திலும் கைதடிவட்டத்தில் நாவற்குழி அருள் வீதி சனசமூக நிலையத்திலும் இடம் பெறுகின்றன.

வடமராட்சிக் கோட்டத்தில் உடுப்பிட்டி வட்டத்தில் கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையத்தில் நடைபெறுகின்றது.

தீவக கோட்டஎழுச்சிவாரக் கூட்டம் டயஸ் நக்கீரன் குடியிருப்பிலும், மணியரசன் சாம்சன் குடியிருப்பிலும் இடம்பெறுகின்றன.

சிரமதானம்:-

மாவீரர் எழுச்சி வாரசிரமதானப் பணிகளில் இன்று சங்கானைவட்டத்தில் பத்தாயிரம் மக்களுக்கு நீண்டகாலப் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் தரவு அமைத்தல் நல்லூர் வட்டத்தில் கொக்குவில் இந்து மயானம் மக்கி போட்டு பாதை செப்பனிடுதல். தென்மராட்சி கோட்டத்தில் கைதடி வட்டத்தில் மேற்கு வாரியான் வீதி திருத்த லுடுப்பிட்டி வட்டத்தில் வல்வெட்டி வெள்ள வாய்க்கால் செப்பனிடல், தீவக கோட்டத்தில் பூம்புகார் நக்கீரன் குடியிருப்பு, அரியாலை டயஸ் குடியிருப்பு, அரியாலை மணியரசன் குடியிருப்பு அரியாலை சாம்சன் குடியிருப்புகள் துப்பரவு செய்து தரவுகள் நிரப்பி வடிகால்களும் செப்பனிடப் படவுள்ளன.

மாணவர் அமைப்பினால் வலிகாமம் கோட்டத்தில் மருதனார்மடம் சந்தி, கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் ஆகியனவும் சாவகச்சேரி கோட்டத்தில் சாவகச்சேரி பொது மைதானம் துப்பரவு செய்யப்படவுள்ளது. பருத்தித்துறை கோட்டத்தில் கிராமக் கோட்ட சந்தி துப்பரவு செய்யப்படவுள்ளன.

## நிவாரணம் வழங்கப்படுகிறது

காரைநகர் பல. நோ. கூ. சங்கம் தமது வாடிக்கையாளர்கட்கு 19A க்கு உரிய நிவாரணம் வழங்கிக் கொண்டு இருக்கின்றது இக் கொடுப்பனவு எதிர்வரும் 18. 11. 94 மாலை 5 மணியுடன் முடிவடையும். என அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளுடன் பேசுவது குறித்து ராவ் சந்திரிகாவை எச்சரித்தாரா?

(கொழும்பு)
இனப்பிரச்சினைக்கான தீர்வு பெறும் முயற்சிகளில் கவனமாகவும் அவதானத்துடனும் செயற்படவேண்டும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் திருமதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கேட்டுக்கொண்டதாக லங்காதீப பத்திரிகையின் பாதுகாப்பு செய்தியாளர் தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்

திருமதி சந்திரிகா குமாரதுங்க பிரதமராக பதவியேற்றவுடன் தனது விசேட தூதர் வர்மாவை கொழும்புக்கு அனுப்பிய நரசிம்மராவ் திருமதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அவரிடம் கொடுத்தனுப்பிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்ததாக லங்காதீப பாதுகாப்பு செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு நரசிம்மராவ் ஆதரவைத்தெரிவிக்கின்றாரா அல்லது எச்சரிக்கையைத் தெரிவிக்கின்றாரா என்பது குறித்தும் லங்காதீப பாதுகாப்புச் செய்தியாளர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கப்படுவதாவது,

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தனது நீண்ட அரசியல் அனுபவத்தின் மூலமாக, வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு குறித்து அவதானமாக இருக்குமாறு திருமதி சந்திரிகாவுக்கு வேண்டுகோள் விடுக்கின்றாரா? அவ்வாறெனில், சமாதானத்துக்கான பாதை சீரற்ற தன்மை உடையதென அவர் கருதுகிறாரா?

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் மரணத்தின் போது அவரது அரசாங்கத்தில் முக்கிய பங்கை வகித்த நரசிம்மராவ், வடக்கு-கிழக்கு பிரச்சினையை இந்தியத் தரப்பிலிருந்து அணுகுவதில் முக்கிய இடம் பெற்றவர்.

இந்நிலையில், சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு அவர் தனது விருப்பமின்மையை தானனுப்பிய விசேட தூதர் மூலம் தெரிவித்திருக்கலாம். இந்தியாவின் பங்கின்றி பிரபாகரனுடன் பேச்சுக்களைஆரம்பித்ததே இதற்கு காரணமாகவும் இருந்திருக்கலாம்

இந்திய அரசாங்கத்தைவிட இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினையுடன் இந்திய புலனாய்வுப பிரிவான றோ நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது. இருப்பினும் நரசிம்மராவின் விசேட தூதர் கொழும்பு வந்ததும், சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்ததும் றோவுக்குத் தெரியாமலேயே நடந்துள்ளது. இதனடிப்படையில் பார்த்தால், சமாதான முயற்சிகளில் றோவின் இடையூறுகளை தவிர்க்கவும், இவ்வாறு றோவின் தலையீடுகளால் உண்டாகக்கூடிய அனாவசிய பிரச்சினைகளை இல்லாது செய்யவும் நரசிம்மராவ் விரும்பியிருக்கலாம் எனவும் லங்காதீப பாதுகாப்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்,

இதவேளை முன்னாள் எதிர்க்... தலைவர் காமினி திசாந... க்காவுக்கும் றோவுக்குமான தொடர்புகள் பற்றி குறிப்பிட்டபோது காமினியின் மரணச் செய்தி இந்தியாவின் றோ டணியகத்தின் தலைவருக்கும், இந்திய அரசாங்க உயரதிகாரிகளுக்கும் உடனடியாக தெரிவிக்கப்பட்டதாகவும், இதைத் தொடர்ந்து சந்திரிகா - புலிகள் பேச்சின் நிலைமைகள் பற்றியும் இந்தியாவில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காமினி தனது மரணத்துக்கு முன்னர் திருப்பதிக்கும் சென்னைக்கும் விஜயம் செய்து இந்திய அரசாங்க உயரதிகாரிகளை சந்தித்ததும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது:

## யாழ். தபால் திணைக்கள உயர் அதிகாரிகள் மாற்றம்?

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்ட தபால் திணைக்களத்தில் உயர் அதிகாரிகள் வரிசையில் பல மாற்றங்கள் இடம்பெற உள்ளதாக தபால் தொலைத்தொடர்பு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இம் மாற்றங்களில் வட மாநில தபால் அத்தியட்சகர் பதவிக்கு மன்னார் பிரதம தபாலதிபராக இருக்கும் திரு. பாலசுப்பிரமணியம் நியமிக்கப்பட உள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை யாழ் பிரதம தபாலதிபரும் வெளியூருக்கு பதவியுயர்வுடன் மாற்றப்படலாம் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி வட மாநில தபால் அத்தியட்சகர் பதவியில் தற்போது இருக்கும் திரு. சேதுகாவலர் ஓய்வு பெறுவதை அடுத்தே இம்மாற்றங்கள் நிகழவுள்ளதாக மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [சி, நி]

## மாவீரர் நாள் கலந்துரையாடல்

மாவீரர் நாள் தொடர்பாக பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்று 1,15 மணிக்கு கரவெட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், 2.30 மணிக்கு மீசாலை விக்கினேஸ் மகாவித்தியாலயத்திலும், 1.30 மணிக்கு அராலி இந்துக் கல்லூரியிலும், 11 30 மணிக்கு முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும். 2 மணிக்கு யாழ்ரன் கல்லூரியிலும், 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், 2 மணிக்கு டிறிபேக் கல்லூரியிலும் கலந்துரையாடல்கள நடைபெறும்

## திருத்தம்

நேற்றைய ஈழநாதம் தினசரியில் 6-ம் பக்கத்தில் வெளிவந்த வீரச்சாவடைந்த போராளிகளின் உருவப்படங்களின் கீழ் இடப்பட்ட பெயர்களில் 2-ம் லெப். சிவலோகநாதன் (சத்தியா) என்பதற்குப் பதிலாக லெப். சிவலோகநாதன் (சத்தியா) என தவறுதலாக இடம்பெற்றுள்ளது. திருத்தி வாசிக்கவும்,


## கேள்வி அறிவித்தல்

### டிராக்டர் (இழுபொறியந்திரமும் பெட்டியும்) வாடகைக்கு அமர்த்துதல் - 1995

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை

மேற்படி இழுபொறியந்திரமும் பெட்டியும் 1-1-95 தொடக்கம் 31-12-95 திகதி வரையான காலப்பகுதிக்கு வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்விகள் 02-12-94ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை பத்திரப் பணம் ரூபா 25/-ம் வைப்புப் பணமாக ரூபா 100/-ம் செலுத்துவதன் பேரில் 30-11-94 ந் திகதி நண்பகல் 12. 00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்கப் பெறும் கேள்விகள் 02-12-94 அன்று பிற்பகல் 2. 00 மணிக்கு திறக்கப்படும் அவ்வமயம் கேள்விகள் சமர்ப்பிப்போர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்,

ஆறுமுகம் மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
15-11-94 (சி-10723)


# லயனல் பேர்னாண்டோ விரைவில் இராஜினாமா?

தகவல்துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ விரைவில் தமது பதவியை இராஜினாமா செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனது பணியில் பிரதமர் அலுவலக அதிகாரிகள் தேவையற்ற விதத்தில் தலையிடுவதை ஆட்சேபித்தே அவர் ராஜினாமா செய்யத் திட்டமிட்டுள்ளார் என சண்டே ரைம்ஸ் பத்திரிகை கூறுகிறது இவர் லேச் ஹவுஸ் பத்திரிகை நிறுவனப் பணிப்பாளர் பதவியையும் இராஜினாமா செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வெளியூர் தபால்களை உடன் சேர்க்கவும்

[யாழ்ப்பாணம்]
யாழ் பிரதம தபாலகத்திலிருந்து நாளை வியாழக்கிழமை பிளம்போயன் கப்பல் மூலம் வெளியூர் தபால்கள் அனுப்பப்பட உள்ளன.

இதற்கான வெளியூர் தபால்களை இன்று மாலை 4 மணிக்கு முன்னதாக யாழ் பிரதம தபாலகத்திலும் காலை பத்துமணிக்கு முன்னதாக வடமராட்சி தவிர்ந்த ஏனைய தபாலகங்களிலும் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார்

இதேவேளை இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கான தபால்களை இன்று காலை 10 மணிக்கு முன்னதாக யாழ் பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (சி, நி)

## 'சிறிய' வரவுசெலவுத்திட்டம் செவ்வாயன்று வரும்

[கொழும்பு]
அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சிறிய அளவிலான வரவு செலவுத் திட்டம் ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமையளவில்பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு தினங்கள் வரை இது தொடர்பான விவாதங்கள் பாராளுமன்றத்தில் நடைபெறலாம எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொருளாதார கொள்கைகளை அறிவதற்கு இச் சிறிய வரவு செலவுத் திட்டம் கணிப்பீடாக அமையுமென பொருளியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

95-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் அல்லது பெப்ரவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்படலாமெனவும் தெரிய வருகின்றது.

## நாய்களுக்கு தடுப்பூசி

[யாழ்ப்பாணம்]
தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கான ஏ;ஆர்.வி தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. நேற்றுமுதல் மூன்று தினங்களுக்கு மல்லாகம் சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள சுமார் பன்னிரண்டு நிலையங்களிலும், அதைத் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு அளவெட்டி சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள பன்னிரண்டு நிலையங்களிலும் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

### மங்கள

நாயக்காவையே பிரதமராக நியமிக்குமாறு கோரும் மனுவொன்றை இவர் தயாரித்ததாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### அடுத்த

மேலும் தெரிவித்தார்

முதலாம் கட்டப் பேச்சுக்களில் அரசாங்க தரப்பிற்கு தலைமை வகித்து வந்த பலபத்த பென்டி தற்போது ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே

### பாராளுமன்றம்

கலைக்க முடியாது எனினும், பாராளுமன்றம் முழுமையாக வேண்டும் பட்சத்தில் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது;

இதேவேளை, அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் அரசியலமைப்பு மாற்றப்பட முன்னர் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்த அசாங்கம் சிந்தித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன;

### இலங்கை

முதலாவதாக கிடைத்தது. இத்தகவலை அவர் பக்ஸ் மூலம் கபினட் செயலர் சுரேந்திரசிங்கிற்கு அனுப்பினார்; இதைத்தொடர்ந்து மறுநாள் கபினட் அலுவலகத்தில் றோவின் உயர்நிலை அதிகாரிகளுக்கும் இந்திய வெளியுறவு அமைச்சின் மூத்த அதிகாரிகளுக்கும் மற்றும் இந்திய இராணுவ புலனாய்வு, புலனாய்வு நிறுவன அதிகாரிக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் வாபஸ் பெற்றவையோடு இலங்கையில் செயற்பட்ட றோ கையாட்கள் பலரும் மீளப்பெறப்பட்டது தவறானதுதான் என்பதை அங்கு றோவின் செயலர் அவ்தார்சிங் சியாலி ஒப்புக்கொண்டார்;

கூட்டு புலனாய்வு கூட்டங்களில் றோ சிறிலங்கா விவகாரங்களுக்கான இந்திய வெளியுறவு பிரிவின் தலைவர் ரகுனானந்தன், லால்பாட்டியா போன்றோருடன் அடிக்கடி கலந்துரையாடி வருகிறது என்றும் சண்டே லீடர் பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது;

### ஜெனரல்

திசாநாயக்காவின் வீட்டில் பொலிஸ் சோதனை ஏன் நடைபெற்றது என பொலிஸ்மா அதிபர் பிராங்டி சில்வா விளங்கப்படுத்திய போதும் அவ்விளக்கத்தில் ஜனாதிபதி சந்திரிகா திருப்தி அடையவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை கடற்படை, விமானப்படையைச் சேர்ந்த உயர் பதவிகளிலும் மாற்றம் செய்யப்படவுளளதாக 'லக்பிம' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வன்செயல்கள் நடைபெற்ற காலங்களில் பொலிஸ், இராணுவத்தினர் மேற்கொண்ட குற்றங்கள் ஊழல்கள் தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளுதல், ஆயுத விற்பனை தொடர்பாக உயர் அதிகாரிகள்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுத்தேர்தலுக்கும், புதிய அரசின் பதவியேற்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் திட்டமிடப்பட்டிருந்த இராணுவச் சதி குறித்தும் விசாரணை நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது:

## உதைபந்தாட்டம்

யாழ். மிட்-ரவுண் றோற்றரக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று மாலை 3. 00 மணிக்கு யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் மோத இருக்கும் அணிகள்:

- ★ சென் அன்ரனீஸ் வி க. எதிர் ஸ்கந்தா வி; க.
- ★ ஞானமுருகன் வி. க. எதிர் ஜங்கென்றீஸ் வி; க.

### மாவீரர்

ஸ்தாபனங்கள், வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் என்பன ஈடுபட்டு வருகின்றன.

கைதடி வட்டத்தில் கைதடி சந்தியிலும், சாவகச்சேரி வட்டத்தில் சாவகச்சேரி நீதிமன்ற மைதானத்திலும், கொடிகாமம் வட்டத்தில் கொடிகாமம்புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலும் பளை வட்டத்தில் பளை பிரதேச செயலகத்திற்கு அருகாமையிலும், மாவீரர்களது திருவுருவப்படங்களை வைப்பதற்கு கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை தென்மராட்சியின் பல பகுதிகளில் சிரமதானப் பணிக... , எழுச்சி வாரக் கருத்தரங்குகள் என்பன நடைபெற்று வருகின்றன இவற்றில் பெருந்தொகையான மக்கள் ஆர்வமுடன் பங்குபற்றி வருகின்றனர். (86)

## அபிவிருத்தி திட்டங்கள்பற்றி மூன்றுநாள் ஆய்வுப்பட்டறை

நாட்டின் அனர்த்தங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் இன்று தொடக்கம் மூன்று நாள் ஆய்வுப்பட்டறை ஒன்றை நடாத்துவதறகானஏற்பாடுகளை அரசதிணைக்களங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து மேற்கொண்டுள்ளன

இந்த வகையில் இன்று காலை 8. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் துறைசார் நிபுணர்களும், கல்விமான்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் இவ் ஆய்வுப் பட்டறையில் இன்று நடைபெறும் முதலாவது அமர்வில் விவசாயம், விலங்கு வேளாண்மை, சூழல், கடல்வளம், கைத்தொழில் ஆகிய துறைகளிலும் நாளை நடைபெறவுள்ள இரண்டாவது அமர்வில் பொருளாதார உட்கட்டுமான துறை மற்றும் சேவைகள் தொடர்பாகவும் நாளை மறுதினம் நடைபெறவுள்ள மூன்றாவது அமர்வில் சமூக உட்கட்டுமானம் ஆகிய துறைகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மதிப்பீட்டாளர் கூட்டம்

முதனிலைத் தேர்வு பிரதம மதிப்பீட்டாளருக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பி,ப. 2 மணிக்கும் இளநிலைத் தேர்வு பிரதம மதிப்பீட்டாளருக்கான கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப 2 மணிக்கும் நல்லூர் சி, சி. சாதனா பாடசாலையில் நடைபெற விருப்பதனால் சகல கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், மதிப்பீட்டு நிலையப் பொறுப்பாளர்கள், பிரதம தேர்வாளர்கள், கட்டுப்பாட்டுத் தேர்வாளர்கள், முதன்மைத் தேர்வாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

### காமினி

வுறுத்தல்களை தொடர்ந்து அவர் தனது முடிவை கைவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

### அமெரிக்க

டுகளை 30 தினங்களாக இவர்கள் ஆராய்ந்ததாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, இந்தக்கோரிக்கையை விடுத்திருந்ததாகவும், பாதுகாப்பு பிரிவுகளின் கட்டமைப்பு, அவற்றுக்கிடையிலான தொடர்புகளில் காணப்பட்ட பலவீனமானதன்மைகளை கொழும்பு வந்திருந்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் ஆய்வின் பின் சுட்டிக்காட்டியதாகவும் சண்டே ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து 93 ஆம் ஆண்டின் பிற்பகுதிகளில் 24 பொலிஸ் உயரதிகாரிகள் ஜோர்ஜியா மாநிலத்தில் விசேட பாதுகாப்பு பயிற்சிகளைப் பெறச் சென்றதாகவும் அது மேலும் தெரிவித்தது.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இத் திட்டம்கைவிடப்பட்டதுடன். பயிற்சி பெற்ற அதிகாரிகள் பரவலாக வேறிடங்களுக்கு கடமைகளுக்கு அனுப்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது;


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

நல்ல உடல்வாகுள்ள தயார் நிலையிலுள்ள, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் முறைமாற்று அடிப்படையில் வேலை செய்வதற்கு தேவை.

உயரம்: 5' 4'' மும் அதற்குமேலும்.
வயது: 25—45
கல்வித் தராதரம்: குறைந்தது 8-ம் வகுப்பு.
அனுபவம்: மேலதிக தகைமையாக கருதப்படும்.

தயவு செய்து சொந்தக் கையெழுத்தில் முழுமையான சுய விபரங்களுடன் 23-11-94 காலை 11.00 மணிக்கு நேரில் வரவும்,

யாழ். மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(சி-10722)



## கல்வி ஆண்டு 1995

### புதிய அனுமதிகள்

1994 இடைக்காலத்தில் பெயர் நீக்கப்பட்டவர்கள் தகுந்த காரணம் காட்டும் பட்சத்தில் அனுமதிக் கட்டணம் இன்றி சேர்த்துக் கொள்ளப்படுவா. இச் சலுகை நவம்பர் 30.ம் தேதி வரை மட்டுமே,

### ஏனைய புதிய அனுமதிகள்

டிசம்பர் 01 முதல் வழங்கப்படவுள்ளன

- ★ எல்லா வகுப்புகளிலும், மூன்று (03) வெவ்வேறு பிரிவுகளில் இடவசதிக்கு ஏற்ப சொற்ப அனுமதிகள் மட்டுமே வழங்கப்படவுள்ளன.
- ★ மாணவர்கள் பெற்றோருடன் வந்து அனுமதியைப் பெறுவது விரும்பத்தக்கது,
- ★ அலுவலகம் ஏழு நாட்களும் இயங்குகிறது:

23 வது வெற்றி ஆண்டில்...

ESTD:-1973 REGD: № J/7993
The Express Institute
IRUPALAI - KOPAY
(சி-10718)



## மரண அறிவித்தல்

### திருமதி குமாரசாமி தவமலர்

வல்வெட்டியைச் சேர்ந்த திருமதி குமாரசாமி தவமலர் கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், கலாவதி (லண்டன்), தவக்குமார், சந்திரமலர், பிறேம்குமார் (லண்டன்), ரூபாமலர் (லண்டன்), தேவகுமார் (லண்டன்), சூரியகுமார் (லண்டன்), சாந்தகுமார் (இலங்கை சட்டக் கல்லூரி இறுதியாண்டு மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாதசுந்தரம் [வைத்திய கலாநிதி லண்டன்], சிவபாலன் (பொறியியலாளர் லண்டன்,) சரவணகுகா, சோதிமலர் (வெளி)(உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன்கல்லூரி), சுமித்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் 15-11-94 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்;

தகவல்:
ந. சரவணகுகா
[மருமகன்]
வல்வெட்டி:
(சி-10716)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;